**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 65/2025**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 24.10.2025 | | |
| பெயர்: | வாசுதேவன் (PW–2 Chief and cross) | தகப்பனார் பெயர்: | கலியமூர்த்தி |
| கிராமம்: | கோவில்பத்து | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 35/2025 |

**முதல் விசாரணை : 24.10.2025**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

**(ஆரம்பித்த நேரம் –12.58)**

எனக்கு சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். நான் வாதிக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வாரிசு சான்றிதழுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். யாருக்கு வாரிசாக வேண்டி வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது. வழக்கு சம்மந்தமாக எந்த விபரமும் எனக்கு தெரியாத காரணத்தால் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>

<u>மறு விசாரணை இல்லை.</u>

**(முடிவு நேரம்–13.01)**